# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 269/2022 நாள்.20.04.2026

### PW2- திரு. சுரேஷ், த/பெ. திரு.ஜெயராசு

1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வா.சா.1 எனது அண்ணன் என்றால் ஆமாம். எனக்கு வயது என்ன என்றால் 37. வழக்கு தாக்கல் செய்தது என் அப்பா என்றால் ஆமாம். வழக்கு பற்றிய முழுவிபரம் என் அப்பாவுக்கு தெரியும் என்றால் ஆமாம். எனக்கு எதுவும் தெரியாது என்றால் அப்பா சொல்லியதால் தெரியும். என்ன பரிகாரம் கேட்டு என் அப்பா வழக்கு போட்டுள்ளார் என்றால் வேறு ஆள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ததால் தடங்கல் மனு கொடுத்து வழக்கு போட்டார். வழக்கு சொத்து எந்த புல எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் எங்கள் புல எண் எனக்கு தெரியும். எங்கள் புல எண் என்ன என்றால் 126/9. மற்ற புல எண்கள் பற்றிய விபரம் தெரியாது என்றால் ஆமாம். சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் மூக்கப்படையான்பள்ளத்தில் உள்ளது கந்தர்வகோட்டை தாலுக்கா. சொத்து எப்படி கிடைத்து என்றால் கோவிந்தசாமி வாரிசுகளிடமிருந்து ரத்தினசாமி வாரிசுகளிடமிருந்தும் என் அப்பா வாங்கினார். என் அப்பா எந்த ஆண்டு கிரையம் வாங்கினார் என்றால் 2002. பத்திரம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். புல எண் 126/9 தஞ்சாவூர் முன்சிப் நீதிமன்றத்தில் 346/2004 நடந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பா யாரிடம் கிரையம் வாங்கினார் என்றால் மேல்பாதி மணியிடமிருந்தும், கீழ்பாதி ரத்தினசாமி வாரிசுகளிடமிருந்தும் வாங்கினார். நான் மணியிடமிருந்து கிரையம் வாங்கிய பத்திரம் மட்டும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 ஆவணம் சட்டகருத்துரை என்றால் ஆமாம் அதில் புல எண் 126/9 உள்ளது என்றால் ஆமாம். 17.12.2009 இல் வாங்கியது என்றால் ஆமாம் அது வாங்கபட்ட போது எனக்கு தெரியாது வங்கியிலிருந்து திரும்ப வாங்கியபோது தெரியும். என் அப்பாதான் அந்த லோன் வாங்கினார் என்றால் ஆமாம். அந்த சட்டகருத்துரை வாங்கும்போது என் அப்பா மேற்படி வழக்கை பற்றி சொல்லாமல் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.14,15,16 தாவா சொத்து சம்மந்தபட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 126/9 என்பது 1ஆம் பிரதிவாதி பாப்பாத்தியம்மாளுக்கு நீதிமன்ற பாகபிரிவினை வழக்கு மூலம் ஒதுக்கபட்டது என்றால் தெரியாது. 126/9 முழுவதும் பாப்பாத்தியம்மாளுக்கு சொந்தம் என்றும் என் அப்பாவுக்கு அனுபவம் உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணம் கணினி பட்டா அது பாப்பாத்தியம்மாள் பெயரிலுள்ளது அது **பி.சா.ஆ.1**

ஆகும். அதன் புல எண் 126/9ஏ. நீதிமன்ற தீர்ப்பை செல்லாது என்று கேட்டது தவறு என்றால் சரியல்ல. மற்ற புல எண்களை பொறுத்து பாப்பாத்தியம்மாளுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல. 126/9ஏ பொறுத்தவரை வழக்கில் நாங்கள் கோரும் பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் அப்பா வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மணியும் நாங்களும் ஒரே ஊரா என்றால் ஆமாம். அ.வ எண்.346/2004 வழக்கில் மணியும் ஒரு தரப்பினர் என்றால் தெரியாது. என் அப்பாவிடம் மணி வழக்கு நிலுவையில் இருப்பதை சொல்லி விற்றார் என்றால் தெரியாது. என் அப்பா எப்போது விலைக்கு வாங்கினார் என்றால் 2002. மணி எப்போது விலைக்கு வாங்கினார் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 மணி வாங்கிய பத்திரம் என்றால் ஆமாம். எந்த அ.வ எண் தீர்ப்பை நீக்க வேண்டும் என்று என் அப்பா வழக்கு போட்டார் என்றால் தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக ஏற்கனவே வழக்கு நடந்து முடிவாகிவிட்டது என்றும் அதில் மணிக்கு எந்த பரிகாரமும் கிடைக்கவில்லை என்றும் அதனால் இந்த தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்றும் கோரியுள்ள பரிகாரம் கிடைக்காது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.20 17:31:35 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.